932

ஸ்ரீ

சர்வம் விஷ்ணுமயம்

ஸ்ரீ ம தே ரா மா நு ஜா ய் ந ம:

# ஊஞ்சல் வனமென்னும் மொண்டிபாளையத்து ஸ்தல மஹாத்துவம்.

இஃது

கன்னா நகரம் மகா-ள-ஸ்ரீ நாரப்ப நாயக்கரவர்களா லியற்றப் பட்டு.

கோ-தா-போலீஸ் ஸ்டேஷனுபீசர் குப்புசாமி நாயடு ஷை சே
லூர் போ. ஸ்டேஷனுபீசர் வி. முனுசாமி நாயடு, திருப்பூர்
ரெவினியூ இன்ஸ்பெக்டர் துளசி நாயடு ஷை ஸதலத்
தின் மானேஜர் பெரிய மாதவ நாயக்கர் சின்ன மாதவ
நாயக்கர் இன்னும் அநேக பாகவதர்களின்
வேண்டுகோளின்படி

கோயமுத்தூர்;
காளப்பட்டி வி. திருமலைக்கொண்டம நாயக்கரவர்களுடைய
குமாரர்
சிங்கிரி நாயக்கரவர்களால்
பிழையறப் பரிசோதித்து

சேலம். பகடால, நரசிம்மலு நாயடவர்களது
கோயமுத்தூர் கலாநிதி முத்திராக்ஷர சாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

இப்புஸ்தகம் வேண்டுபவர்கள் மேலே குறிக்கப்பட்ட
எல்லாரிடமும் பெற்றுக் கொள்ளவும்.

இதன் விலை அணா - 4.

17
1886-4  2

# முகவுரை.

மொண்டிபாளைய ஸ்தலமானது ஓர் ஸ்திரியானவள் அக்கினியில் ஸ்நானஞ் செய்தாளென்றும், அது முதற்கொண்டு இந்த ஸ்தலமுண்டானதென்று சிலபேர்கள் சொல்லிக்கொள்வது சுத்த பொய்.

## இந்த ஸ்தலத்தின் மகத்துவத்தின் விவரம்.

ஆலத்தூரில் வசிக்கும் மாதவநாயக்கர் குமாரர் கொண்டம . னவர் பதினாறு வயதில் கரித்திம்மராய பெருமாள் சன்னதிக்குச் சமீபத மாடுகள் மேய்த்துக்கொண்டிருந்தனர். இவருக்கு ஆவேசமுண்டாகவும், இவரது தந்தைதாய் முதலானவர் தெய்வமோ பூதமோ வென்று சந்தேகிக்கவும் இவர் கிணற்றில் ஓர் வாழையிலையைவிரித்து அதின்மீதில் ஒருகூடை புளியின்கொறுப்பைக்கொட்டி மட்டம்செய்து அதின்மீதிருந்து நாள்தோறும் ஸ்ரீயப்பதியை நினைத்து விளையாடிவந்தனர். சகலமான கம்மவாரெல்லோரும் சேர்ந்து தாங்கள் மௌனமாயிருப்பது எங்களுக்கு சந்தேகமாயிருக்கிறதென்றும் அச்சந்தேகத்தை நிவர்த்தி செய்யும்பொருட்டு அவரை வேண்டிக்கொண்டனர்கள். கலியுகசகாப்தம் 4813ம் வருஷம் தமிழ் நந்தன வருஷம் அற்பிசி மாதம் 15ம் தேதி புதன்கிழமை இரவு இருபத்துநாலு நாழிகை அளவில் இவர் நித்திரை நீங்கி எழுந்து இவ்வூருக்கு மேல்புறம் மொண் பத செல்லை மத்தியில் சென்று ஓர் பெரும் பாறையை பிளக்கு த்திரவுசெய்து அப்பாறையின் கீழ் இருக்காநின்ற முப்பத்து முக் தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் கோடி ரிஷிகளும் சகலமான தேவர்களும் முன்பு பூசைசெய்து வந்திராநின்ற இப்போது வழங்கிவருகிற சாலக்கிராமமும், தாம்பிரத்து உத்திராணியும் ஓர் கிண்ணமும் சங்கும் இதுகளை அக்குழியினின்று [illegible] அதை பூசைசெய்துக்கொண்டு வந்தனர். கொள்ளேகாலம் தாலூகா காயற்பட்டணத்தில் புளியமரத்தின்கீழ் திரவியமிருக்கிறதை எடுத்துவரும்படி கட்டளையிட அப்படிக்கெடுத்துவந்து கெர்ப்பமண்டபம் அர்த்த மண்டபம் கட்டினார், இவர் முப்பத்தாமூன்றாம் வருஷத்தில் மோக்ஷமடைந்து விட்டார், இவரது பேரப்பிள்ளைகளால் நாளதுவரையில் அநேக விசித்திரமான வேலைகள் நடந்துவருகின்றன அந்த ஸ்தலத்திற்சென்று ஊஞ்சல்வன நாதனாகிய மொண்டிபாளையத்து ஸ்ரீ வெங்கடரமணமூர்த்தியை தோத்திரஞ் செய்தவர்களுக்கு சகல வியாதிகளும் நிவர்த்தியாய்வருகின்றன மேற்படி சுவாமியின் மல்லிகையை அநுஷ்டித்துவரும், பாகவதர்களுக்கு விஷமுதலான வியாதிகள் பிரத்தியக்ஷமாய் தீர்த்துவிடுகிறார், இது திருப்பதிதான் என்பதற்குயாதொரு சந்தேகமுமில்லை, சகலமான பாகவத சிரோன்மணிகள் மேற்கண்ட ஸ்தலத்தைக்கண்டு சேவைசெய்து பிரம்மாநந்தமடைய விரும்புகிறேன்,

இப்படிக்கு

கா. தி. வி. கு. சிங்கிரிநாயக்கர்.



# ஸ்ரீ மொண்டிபாளையம் ஸ்தல மஹாத்துவம்.

932
274.93

### கடவுள் வணக்கம்.

### திருமால் துதி.

பூரண கலையாய்ப் பாரில் புரந்து தான் சிறந்து வாழுங்
காரணப் பெருமாண் மீது கவிதையா னெழுதும் வண்ணந்
தாரணி விளங்கச் செய்தேன் றலைப் புராணத்தை யாதி
காரணனார் தன்று ளெங்நாளு மென் றலைமேற் கொள்வாம்.

ஆதி திருமலை வேங்கடாசலத்தானே யெந்நாளு முன்பாத சரண
மமுதகடலிற் பிறந்தாதிலக்குமி யெங்க ளலர்மேலுமங்கைசரணம்
பாதிமதியணி பூதனார் தம்முடைய பாதமெப்போது சரணம்
பார்ப்பதி யெம்மம்மைடவர் சிபாதசேவையான்-பணியவருடருகசரணம்
மேதினி படைத்தவன் றேவி பொற் பாதமும்-விண்ணவர்கள்பாதசரணம்
வித்தையருளைங்கரன் சிதகமதிரங்கவே வேணுமிவ்வேளை யழகார்
மாது மளர் நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசருபனே
வடமலைக்கதிபனெனும் நடனமிடு நல்லூஞ்சல்-வனவேங்கடேச பரனே (1

அளவான நீலகிரியாள் வேங்கடேசர் தன் னுதி மூலப்பிரசங்க
மரியயனரன் மூவரலது வேறொருவர்க்கு மளவிடப்போகாது தான்
உளகாடு மாலக்திபூர் மொண்டிபாளையத் துபயமா மெல்லை தனிலே
யும்பர் சாலக்கிராம மாகி முப்பூசை கொண் டூஞ்சல் வனமுட்புகுந்து
தனமாயிருக்குமே தருமெட்டு கொண்டையன்-றன் வயது பதினாறின்மேற்
றயவுவைத்தவ னுடைய விருதயந் தனனிலே தானே பிரசன்ன மாகும்
வளமான நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசருபனே
வடமலைக் கதிபனெனும் நடனமிடு நல்லூஞ்சல்-வனவேங்கடேசபரனே (2

ஆடுவார் கரிதிம்மராயர் சன்னதியொரு வலங்கார பூசை வேளை
அறிவிலாச்சிறுவரைக் கூடி விளையாடிநின்-றாவேசமானவருளானபோது
காடுமேடது நாடு காடு மலை தானெலாங் கடிகையிற் சுற்றி வருவார்
கலியுகந்தன்னிலிது கண் காட்சியோ வென்று-கருதுவார் தந்தை தாயார்
தேடுவாரெங்கு மிது தெய்வமோ பூதமோ செயவினைக் குண மிதாமோ
திருவுளப்படி யிதெப்படி முடியுமோ மனிதர்-தெரியப்படாதென்று தான்
வாடுவார் நீலகிரி வாழு மலர் மேன மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல்-வனவேங்கடேச பரனே(3

என்று தானிப்படிப் பலபல விதங்களா-லென் செய்வமே தெய்வமென்
றெண்ணுவார் சரணங்கள் பண்ணுவாரிதுவெலா மெம்பிரான் செய
........................................................................(விதென்பார்)
ஒன்றுமறியாத சிறுவன்றனை யலைப்பதே னுன்பாத தஞ்ச மென்றே
யோயாக் கரித்திம்ம ராயாவுனக்கபய மோ வென்றிருப்ப தறியா
யின்று முதலிதுவெலா மின்று நன்றானதா-லிம்மதலை யுன் மதலை யென்
றிப்புவியில் நின் பெருமை செப்பிடக்கருதுவோ—மின்னமொரு தெய்வ
........................................................................(முண்டோ)
மன்று வளர் நீலகிரி வாழு மலர் மேன மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல்-வனவேங்கடேசபரனே (4

உண்டென்றுரைத்திடுந் தொண்டன்றனைக் காக்க-உத்திரவு மொன்று
........................................................................(தருவா)
யுன்னுடைய சன்னதியிலன்னதானங்கள் பல-வுபகாரமது செய்குவோர்
கொண்டையுன் றந்தையுந் தெண்டனிட்டதுவுமுன்-குற்றமோ குறையோ
........................................................................(யிதின்)
குணமென்னமோ வென்றுமனமுந் திகைத்தநன-கோதண்டராமனென்று
கண்டு தெளியாமலே பண்டை நாளிப்படிக் காலங் கடந்த பினபு
கனமான பெரியோர்களினமான ஜனமெலாங் களரியிற் கூடி மிகவே
மண்டலம் நீலகிரி வாழு மலர் மேன மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல்-வனவேங்கடேசபரனே (5

மிகமான சபைமேவு முபயாதி கம்மவா ரிவராதி முதலானதா
ரித்தலத்தாரின்று நற்றின மிதாமென்று மெல்ல வருமென் சொல்லுவார்
அகமேவு மகனே வுன்னிடமே சன்னதமாடு மரிவேங்கடேசர் தானே
அலவென்றுசிலகோட்கள் பலனென்பதோ பின்னை-யலகைபேய்கூளியாமோ
பகையாளி மிகையோ சொல்லுகவேணுமிது நல்ல—பலமந்த்ர வாதிமுதலாய்
பரைவார்களறிவான பெரியோர்களிது நல்ல—பதிவான வார்த்தை யென்பார்
மகமேரு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(6



என்பார்களிப்படிக் கன்பான பெரியோர்க ளிட நீதி தவிறாமலே
யினிதான் கொண்டையன் கனிவாய் திறந்தள-விலே தென்றுமுறைகூறுவார்
அன்பான தாய் தந்தை நன்பான குருதெய்வ மாதியாய் மனம் நினைந்து
அழிவிலா முப்பத்து முக்கோடி தேவரே வடியேனினைந்த படியே
முன்போன கருமங்கள் பின்வார கெதியாகி முதலான வழிகளெல்லா
முன்னபடியே யொழிய வெள்ளளவு தவறும-லோங்கார மெனச் சொல்லுவார்
வன்பாவு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(7

சொல்லுவாரச்சுதா நந்தா கோவிந்த மதுசூதனா வரி வாமனா
துஷ்ட நிக்கிரகனே சிஷ்டர் பரி பாலனே சோதினைக் கநுகூலனே
மெல்லவே தொல்லுலகி லெல்லவர்கள் காணவே-மிக்க திருவாய்மொழியினால்
விதம் விதமதாகவே பதியதனிலே நின்று வேடிக்கை காண்பதற்காய்
நல்லதொரு கிரிமகிமை சொல்லவருள் புரிவாய் நானிலந்தனில் விளங்க
கதியான சிறுவனீயது மேவி வளாகின்ற நவநீதமுள்ள கிரியே
வல்லவா நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே (8

கிரியிலே நீலகிரி பொன்மலைக்கிணையான கிரிகளே தொன்றுமில்லை
கிரிமூல பலிதரும் ரிசியாசிர் மங்களும் கிளை கூடி வாழு மலையாம்
பிரியாமலனுதினங் கிரிமாதுலாவி வரும் பெருமாளிருக்கு மலையாம்
பிரதூரனெழிலதைக் கரைகாண வறியாத பெரிய தரு வுள்ள வரையாம்
கிரியுமே யெங்கு மதகரி கரியிலங்கு வெகு திக்கு விசயங்கள் பெற்று
கிரமாய் வளர்ந்து பன்னிரு காத வழியுள்ள திடமான வடமேரு தான்
அரிவரும் நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(9

தானுள்ள மலைகோடி தனமுள்ள கற்பகத் தருவுள்ள தினியமலையாந்
தகியுள்ள மதமாயிட மதுவுள்ள மலைமுடிகள் தனியுள்ள தினியமலையாந்
தீனுள்ள மலை பெருந் தேனுள்ள வரை நல்ல தேன்மாங் கனிப்பலாவுந்
தித்திக்கு மூக்கனியு மெத்திக்கு நோக்கினுந் திங்கண் மும்மாரி பெய்யும்
மீனுள்ள மடையருத மிதமுள்ள மலைமாடு மிருகங்களுள்ள மலையாம்
மிளகிஞ்சி கடுகு மஞ்சளுமுள்ள பலசேனை மேலான கனிகரும்பு
மானுள்ள நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக்கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(10

பூவுள்ள மலைநல்ல புனலுள்ள வாவியும்   புதையுள்ள மூங்கிலெங்கும்
பூங்காவனங்களும் நீங்காதிருக்கின்ற   புறாகு சவ்வாது மிருகம்
தாவுள்ள சந்தனத் தருவுள்ள சாம்பிராணித்   தாருள்ளவான மலையாம்
தவசி சித்தாதியர்க டானங்கண் மௌனக   டானே முளங்கு மலையாம்
மாவுள்ள சஞ்சீவி மரமுள்ள திவ்ய பரி   மளவாச முள்ள மலையாம்
மயிலாடவுங் கிளிகள் குயில் கூவவுங் கெருடன்   யாடப்புறா வன்னமும்
வாவுள்ள நீலகிரி வாழு மலர் மேன் மங்கை   மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல்   வனவேங்கடேச பரனே(11

அன்னங்கள் பலபட்சி யெண்ணப்படாகின்ற   வருமார்கள் வனமந்திரா
டைவியிற்றுடர்கின்ற கடமானினங்கள் பன்   னகமான துள்ள மலையாம்
புன்னையும் வாளடவி தென்னையுங் கதலியும்   புளிவிளாங் கனி வில்வமும்
புட்பமுந் துளசி வளர் கற்பமும் விளைகின்ற   பொதியமாமலையாமெனுஞ்
செங்கெலும் பருவமுள கன்னலே லரிசியுஞ்   செந்தாமரைக் கமலமும்
செகமெங்கு முளசெம்பு கெம்பீர முள்ளமலை   செல்வங் கடந்துபெருகும்
வன்னமிகு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை   மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல்   வனவேங்கடேச பரனே(12

பெருகுமே முழுநீலகிரி மீதிலின்னமும்   பேராயிரங் கற்றிடமும்
பெரியதொரு மலைமீதி லிரவு பகல் வாழ்கின்ற   பெருமானே வந்திறங்காய்
புருகூதன் செய் தமைத்த நந்தவனமிதைப்   போலுள்ளதோவெங்கிலும்
பூச்சக்கிர வாளமதி லேசக்கிர மாதான்   புண்ணியா வந்திறங்கும்
துருவது மீதினிற் றிருவு நீ யிருவருந்   துணையாயிருந்த மனையுந்
துலைதூரம் வந்துனது நிலைகாண விண்ணெனது   துறை நீலகிரி யிசங்கே
வருகவே நீலகிரி வாழு மலர் மேன் மங்கை   மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல்   வனவேங்கடேச பரனே(13

இரங்கியே வருவாய் துரங்க வாகன மீதி   லேறி வரவேணு மெதிரே
யினிய மதயானையின் றனிலேறி வருகவுன்   னேழைக் கிரங்குமையா
மரங்களிலிருந்து குடி வாழ்கின்ற செங்கருட   வாகனமதேறி வருகும்
மாயனே யைந்து தலை சேஷவாகனமேறி   வருவாய் வரங்கொடுவாய்
குரங்கு வாகன மீதிருந்து விளையாடி வரு   கோதண்ட ராம ராமா
குறைவிலா நரசிங்க ரூபனே ஸ்ரீவேணு   கோபால வந்தவுவாய்
வரங்குலவு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை   மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல்   வனவேங்கடேச பரனே(14



உதவுவா யிப்படிக்கொத்த நவரத்னகிரி   யுற்றெனைப்பெற்ற துரையே
யுத்தார மொன்றதிக வித்தாரமாகவே   யோங்காரமா யெழுந்து
மதிதனி னினைத்தொருவ ரதிசய நினைத்துவெகு   மௌனங்களான தெல்லா
மலையாமலின்ன தென்றலர்மேலு மங்கைமண   வாளனே சொல்லுமென்று
சுதனை கொண்டயன் கூறவும் வேங்கடேஸ   பருமாவேச மானார்
சொல்லுவே னவனிதனில் வெல்லுவேனொடு பில்லி-சூனியமதான வெல்லா
மதிருமே நீலகிரிவாழு மலர்மேன் மங்கை   மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல்   வனவேங்கடேச பரனே (15

எல்லோர் தடைக்குமே நில்லாத சர்ப்பங்க   ளேதோல்று நீண்டு விஷமும்
எட்டியே கொட்டுமது நட்டுவக்காலி மற்   றெலி புலியுமெம்பு செய்யான்
பொல்லாத நரிநாய்களல்லாத கரடியும்   பூதப் பிசாசெதெல்லாம்
பொற்கிரிப்பதி சங்குசக்கரம நினைக்கவே   போய்விடும் பேய்களெல்லாம்
நில்லாத மானிடர் கல்லாத தீவினைகள்   நீங்குமது பாங்காகவே
நித்தலுந் துதிசெய்த பத்தருக்கன்பாக   வந்துவாய் நின்ற துரையே
வல்லோர்கள் நீலகிரிவாழு மலர்மேன் மங்கை   மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல்   வனவேங்கடேச பரனே (16

துரையாவ னீரேழு லோகத்தி லொருகோடி   சூரியப் பிரகாசமாகி
தொலையாத ஸ்ரீஹத்தி சோவத்தி முதலான   தோஷாந்த காரமெல்லாங்
கரைகாண வறியாத முழுமோட மனிதரைக்   கார்த்து ரக்ஷிப்பதாகிக்
கனலியைக்கண்ட பனியதுபோல் வினையெனைக்-கண்டவுடனண்டாதுகாண்
குறைவிலாச் செல்வங் கொடுத்தகன தானங்கள்—கோலாகலஞ் செய்ய
........................................................................ (வும்)
குவலயத்தனி லெனைத் தெய்வமெனக் கண்டவர்—கொண்டாட வந்
........................................................................ (தாடினேன்)
வரைமேவு நீலகிரிவாழு மலர்மேன் மங்கை   மார்பனே சுயரூபனே
வடமலைக்கதிபனொடு நடனமிடுநல்லூஞ்சல்-வனவேங்கடேச பரனே(17

ஆடினேனின்னமொரு மோடியைக் காணுமென்—றழகான வாவிநீர்மே
லழியாத கனிவாழையிலே யிதிருந்துவிளை   யாடலும் பாடலுந்தான்
தேடியே கனலியொரு கூடையைக் கொடுவந்து—திட்டமாய்க் கொட்டி
........................................................................ (திறவித்)
தேயுவின் [illegible]திருந்தாய் வேனலுதினஞ்   செயா செயா வெனபதாக
நாடியே [illegible]மை கொண்டாடியே வருவார்க   ளலமான குலமானிடர்
நாராயணாவென்று பாராயணஞ்செய்ய   நஞ்சமுதமாகியடுமே
மாடுமே நீலகிரிவாழு மலர்மேன் மங்கை   மார்பனே சுயரூபனே
வடமலைக்கதிபனொடு நடனமிடுநல்லூஞ்சல்-வனவேகடேச பரனே(18

நடனமிடு கெருடகந்தருவர் கிம்புருடர் கின்னரர்—சித்த சாத்தியருமாய்
நன்னெருடனதிக சங்கீத சாஹித்தியங் கன்னாரதரிசைக்கவீணை
யடைவுடனே தும்புருடர் துதிக்கவே துந்துமி யறுமூன்று வாத்தியங்க
ளாகாசவீதிதனி லேகாந்தமாகவே யரிகரி நமோவென்றுகும்
பிடவு முப்பத்திமுக்கோடி தேவாதியர்கள் பூமாரிபொழிய மெய்யோர்
புடை சூழ்ந்திருக்கும் படியாகவே யினிய புவிமீதில் வந்துதித்தேன்
வடமலையில் நீலகிரிவாழு மலர்மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக்கதிபனொடு நடனமிடுநல் லூஞ்சல்-வனவேங்கடேச பரனே(19

உதித்தனன் கொண்டயன் மீதிலே மனதுவைத் தல்லாசமது வாகவே
யுலகத்தி லெங்கெங்கு மிலக பிரசித்தியா யுயர் நிலத்தோர்கள் முதலாய்
துதித்திடத் தக்கதா யாவர்க்கு மகலாத சொர்க்க லோகத்தி லென்றும்
துரையா யிருந்தவர்கள் திரமாயிருக்கவுந் தொலையாத வெற்றி பெறவும்
விதித்திடச் செய்வனிது வுன் றிருப்பதியாக வேதத்தினொலி முழங்க
விதவிதமதாகவே யவரவர்க்கிதமான வேஷம் பொருந்தி வருவேன்
மதித்தூநன் னீலகிரிவாழு மலர்மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே (20

வருவேனெனக்கு மொரு திரமான கற்கொண்டு மண்டப மகிழ்க்கோவிலும்
வருவார்களுக் கடவி மாமானதிற் பெரிய மடமொன்று கட்டிமுடியுந்
திருமாலை கட்டுதற் கரிதாசனுஞ் சங்கு தினமுந் துதிக்கு மொருவன்
தினமொன்று முப்பூசை யெனவுந் துதிக்கவே தியாங்கிருப்பாரில்
தருவேனெவர்க்கு வாமருள் வேனிதற்கு மொரு தடுவேதெனக்கு மிலையே
தயவாக விப்படிக் கியல்பான தொற்படித் தவறாத பத்தரிலையோ
வருவார்க ணீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனேநிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(21

இலையோ வெனப்பொழுது தலமாயிருக்குமல-ரேசமான ரென் சொல்லுவா
ரித்தலந் தன்னிலே நித்தலுந் துதி செய்வ மெய்யடியர் கண் குளிர நீ
நிலையா யிருப்பதின் னிடமென் றறிந்த பின் னியிக்கத்திலா யிதெல்லா
நீல்மேகத்தி னொளி வானமா யிப்புவியி னோரத்தி லுதயமாவாய்
அலர்மேலு மங்கையார் பங்கினில் வாழ்கின்ற மாயனே சதாநந்தனே
யண்டர் தொழு வைகுண்ட பதியாக நின் றமர்ந்து குடிகொண்டமூர்த்தி
மலைமேவு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(22



மூர்த்தியா யிகலோக பரலோக சொர்க்கமா மூவுலகு மாதி யந்தம்
முன்காவ லன்றி மற்றொரு காவ லில்லை யிம் மூதண்ட முற்று மாகக்
கர்த்து மானிடர்கள் வினை தீர்த்து ரக்ஷிக்கவுங் கருணை கடாட்ச முதவுங்
கர்த்தனே பக்தர்க்கு முத்திதர நித்தமுங் கிடைக்கச் சதா காலமுங்
கிளைகூடி வாழ்கவும் மழைமாரி பொழியவுங் கிதமா யெழுந் தருளவே
வார்த்தையருள் நீல்கிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(23

எழுந்தருளுவா யென்றறிந்த பெரியோர் வந் திருந்தடிபணிந்ததினமே
ரிப்பாலகன் மீதி லொப்பாகவே வந் திரங்கியே சொல்லலுற்றார்
குளிர்ந்த வசனந்தானுமுந்தவே சொல்வரிக் குவலயந் தனி லனேக
கோடிபேர் தெய்வமென் றுவொரிது மதின் கோல்மே போலுமென்றே
யுணர்ந்தனி லுணர்ந்தே கிரிகிடுஞ் சிலபேர்க ளோலக்க யிடுவாகி
யுறதிதா னிலையென்று சிறிது பேர் சொல்வதே ஞாலகனந்தவ கார்த்திடாய்
வளர்ந்தாரு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு கல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(24

காரா யெனக்குறுதி கூறியொருத்தரவு. கற்றெண்வரங்கள் பெற்றே
கலிகால மின்னமுஞ் சிலகால முளதென்று-கனயோக்கியந் திசையவனே
டாராய் திருக்கணது நேராயினிப் புதுமை பலபேர் துதிக்க வரிதாய்
பதியாயிருக்குமிட மிதுதானெனக் கமல பதமே யெனக்குதவியாம்
பேராயிரத்த வத மோராயிரத் தெளிவு பீதாம்பரப் பிரகாசம்
பிரியாதிருக்க வரமருள்வா யெனக்கினிய பெருமாளே முத்திதருவாய்
மாராம நீலகிரிவாழு மலர்மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக்கதிபனொடு நடனமிடுநல் லூஞ்சல்-வனவேங்கடேச பரனே(25

முத்திதருவா யென்ற நகைதன்னிலே மோக்ஷங்கொடுத்த தெய்வம்
முனிவரிமையவராதிமுதலானையாலு மும்-மூர்த்திகள் சமைத்ததெய்வம்
சித்திதருவாய் நல்ல புத்திதருவாய் அஷ்ட திக்கு விசயங்கள் பெறுவாய்
ஸ்ரீவெங்கடேச நினதாயகனே வென்று செப்புதற் கிப்பவே நீ
யெத்திசையி லுந்தனிட சத்தியம் விளங்கவே யெங்கும் பிரசித்தியாக
விந்தத்தலங் கானகந்தன்னிலே வந் திருந்தே வருந்துவோனே
வத்திடா நீலகிரி வாழு மலர்மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக்கதிபனொடு நடனமிடுநல் லூஞ்சல்-வனவேங்கடேச பரனே(26

ஏனோ தினந்தடுவதேனோ மனந்தவ தென்னென் றறிந்திலன் யான்
என்னோரமும் முனது கர்ணொ முதன்கனா லென்று விநோதை கேளாய்
நானேயுனக் கடிமையானே னெனப்பகர்வ னோடெங்கு முள்ள விடான்
நகையா திருக்க வழி தகையாதிருக்க வருள் நவகோடி நாரணனு நீ

தானே சொலா திருவதேனே யெனக்கறிவ தாகப்படுத்து மெனவே
தலமாயிருந்த திருமலை மீதிருந்து வந் தவரே பிரசன்னமானார்
வானேரு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக்கதிபனொடு நடனமிடுநல்லூஞ்சல்-வனவேங்கடேச பரனே(27

ஆனதொரு சாலீவாகனனு மோராயிரத் தறுநூற்று முப்பத்தினான்
காதிகலி நாலாயிரத்தியெண்ணூற்று முன-னெக்கு மொன்றுண்டுசென்று
போனதின் பின்பு நந்தனவருட மைப்பசி பிறந்த பதினைந்து தனிலே
புதவார மமர பட்சத்து ரோகணி த்ரிதிகை புரியுமது வரியானதும்
தானுமானைக் கரணமானதோர் சுபதினந் தன்னில் வைகுண்ட மூர்த்தி
தரணிதனிலே பள்ளிகொண் டெழுந்தருள்கின்ற தத்கால நிற்குநிலையே
வானளவு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக்கதிபனொடு நடனமிடுநல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(28

நிலையாகு மாட்சிய தலாம் வெள்ளியொடு புந்தி நீசபக்கச் சூரியன்
நேராய் விளங்கு மங்காரகனு ரேழிலே நின்று தானுட்சியாகிக்
குலையானதிற் காரியாகிய விடபமேகு முதலுச்சனுமாகி யுள்
கோதண்ட ராசி சேர் க்ஷேத்திரந்தனி லண்டர்—குருவாயிருப்ப நன்றே
கலைப்பானதிற் கரிய குலநாக நட்புகற் கடகத்தினிற் கேதுவாய்
கனமான கிரகங்க ளனுமானமாகவே கலையாதிருந்த நாளில்
வலிதான நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக்கதிபனொடு நடனமிடுநல்லூஞ்சல்-வனவேங்கடேச பரனே(29

நாளிலே புதவார நள்ளிரா வதனிலே நாலாறு கடிகையின் மேல்
நலமான கொண்டயன் சனுசா வெழுந்தருளி நாலொட்டரைக்கூவியே
சூழவே தந்தை தயாரு மற்றறிவுளோர் சோதனைப்படி காணவே
சொல்வரா லத்தியூ ரெல்லை மேவிப் பரஞ் சோதிதானாதி மூர்த்தி
வாழு நல்லூஞ்சலின் வனமதிற்றயிவிடம் வலமதாய்ச் சுற்றி வந்து
வட்டமா யிவ்விடம் வெட்டென்ற போதொட்டர்-மனமகிழ்ந்தினிதுகூர்வார்
வாழவே நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(30

கூர்வரா மெங்களிட மாமூலின் வரிசையாங் குத்தலிக் காணிக்கையும்
குறையாம லெங்கள் கை நிறையத் தாம்பூலமுங் கொடுமென்ற போதளவிலே
தர்வார மூங்களுக் குள்ளதொரு காணிக்கை தருவேனெனத் தந்துதான்
தாமதமிலாமலே ரேமகஞ் செய்தபின் சந்தோஷமா யொட்டரும்



சேர்வையாய்ப் பெரும்பாறை யிடந்த பின்னடியினிற்—கிறமனலு முளாழு
......................................................................................... (மூனறுரு)
செணமதி லெடுக்க நற்குணமான கொண்டயன் சீக்கிர மிரங்கலுற்றார்
மார்வமே நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(31

உற்றார்களாதி பூமாதேவி கெற்பத்தி லுட்புகுந் தேதுசெய்வா
ருள்ள பூமணலையே மெள்ளவே தள்ளவன் றுலகனந் தவதாரமாய்ச்
சற்றே தெரிந்தபின் சுற்றேவர் பூசித்த சங்கு சாலக்கிராமமுஞ்
சன்னதிக் கழகான சின்னதொரு கிண்ணமும் தாம்பிரத்துத் தாணியும்
ஒற்றுதி மாதவன் பெற்றே யெழுந்தருளு மோனரயே தென்ன யென்னி
லுத்தமா பத்தினி கற்புடைய கன்னிதன் றேன்ரயாம் பார்மீதிலே
வற்றாத நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(32

பார்மீதில் வாமனவதாரமா யிப்பொழுது பகவான் திருக்கருணையாற்
பதியான நீலகிரியது விட்டிரங்கியே பந்திகள் முந்தி வரவே
தேர்மீதிருந்து வருவார் போலவே கண்டு தேவேந்த்ர கொலுவதைப்போல்
திட்டமாய் வாழஷ்ட திக்கு பரிபாலருந் தின்சரிதையுஞ் சூழவே
கார்மேக வண்ணனைப் பார்மீதெடுத்த பின் கண்டனேகர் தெண்டனிடவே
காரண முகுந்தனே நாரண வைகுந்தனே கருடவாகன ரூடனே
வார்மேவு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(33

கெருடவாகன ரூட நாக வைபோக சங் கீத கைத்தாளங்களுங்
கிண்கிணி யோடாரங்கள் வெண்சங்க நாதங்கள் கெற்சிக்கு மந்தவேளை
புருட ராகங்களா யொப்பிடும் போலவே புஷ்ப மாரிகள் பெய்திடும்
பூலோக மெங்கணும் மேலாய் விளங்கவே பொங்கு மெழுகடலு மெங்கும்
இருடி கேசவனு மெழுந்தருளுகின்ற நா ளெங்குஞ் சிறக்கேரன்றாற
லினிய கொண்டயனுடைய வயது கொண்டிறைவ—னருளியது முப்பத்து
......................................................................................... மூன்றே
வருடமது நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(34

முப்பத்து முக்கோடி தேவாதி தேவரும் முனிவோர்களாதி முதலாய்
முன்னிற்பதாகவும் சொர்ன்னப் பிரகாசமும் மூர்த்தியைப் போற்றிசெய்தே
தீபத்துலக்கம் பிரகாசிப்பதாகச் செனிக்கின்ற காலமெல்லாஞ்
சிங்காசனக் கொலுவலங்கார மாகவே செயமங்களம் பாடவே
தூபத்து வாசங்கள் ரேசித்து வீசவுந் துய்ய பன்னீராடவுந்
துளசி யாபரணமுங் களபகஸ்தூரியுந் துந்துபி முளங்கவே தான்
மாபத்த நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(35

வேதாகமங் கற்ற சாதி மறையோர்களும் விண்ணப்பமது செய்யவே
விகட ப்ரசங்கமிடு மகுட வர்த்தனர்களும் வீரப்ரதாப மிக்கோர்
பாதார விந்தமதைப் போதவே யனுதினம் பணிவிடைகள் செய்வோர்களும்
பரம பாகவதரும் தருமமே செய்கின்ற பத்தர் ஜெனபதி யாதிதன்
மாதா பிதா வன்ன தானங்கள் செய்கின்ற மனிதரும் பல ஜாதியும்
மற்றுளோ ராதமக் கற்றுளோ ராசையால் மனமகிழ்ந்தே பணிந்தார்
மாதேவ நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(36

பணிந்தே மகிழ்ந் தங்கிருந்தோர்களும் பெரும் பாறையின் குழிமேவியே
பந்தலுண்டான பின்னங் கிடந்தன்னிலே பய பக்தியாக நின்று
துணிந்தே கொணர்ந் தங்கனாந்தன்னி லண்ணலைத் துளபமாலையு மணிந்து
துதிசெய்வமென்று நிற்பதிசெய்து கொண்டயன் தோத்திரஞ் செய்வதற்காய்
அணிந்தார்களுமங்க ளங்காங்க மெங்குமா யரியோம் நமோவென்று தா
னவ்வூஞ்சலின் கான முவ்வேளை பூரிப்ப தாகத் தொடங்கினால்
மணிந்தானே நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(37

நானென்கு வருடத்தி லானே னுனக்கடிமை நாராயணாயா நமோ
நம்பினேனுன்னை மற் றம்புவியில் வேறில்லை நரசிங்க ரூபா நமோ
சேனுபதிக் கடவுளானே நமோ வாசு தேவாயமாயா நமோ
ஸ்ரீதார நந்த கோவிந்தனே மாதவா ஸ்ரீவேங்கடேசாநமோ
தானே வனத்தில் வளர் திணர்கடயாபர தாமோதராயநமோ
சான்னித்ய மாகவென் றியானத்தில் வளர் சங்கு சக்ராயுதத்தாநமோ
வானரு நீலகிரிவாழு மலர்மேன் மங்கை மார்பனே சயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே (38



ஐயாவுனைப்பூசை செய்யாதிருந்தாலு மபசார மாகுமென்பா
ரடியேனினைந்திடும் படியே முடிப்பனினி யாரென்ன சொன்னாலுமென்
னிய்யே பொருத்தருளு மையா வொருத்தரினி நிகராயுனக்குளரோ
நேமாதி கிட்டையுஞ் சேமாதி செயமது நெறியாயிருக்க வறியேன்
பொய்யானுரைக்கினுஞ் செய்யாதகுற்றங்கள்-பொருமையும் பெருமை செய்
.............................................................................................................(வார்)
பூமி பாரத்திலுன் னாமமே மெத்தவும் போதவே நீதி பெறவே
மையாரு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே 39

நின்னுமமே யெனக்கெந்நாளு மகலாத நிசமான திரு மந்திரம்
நின்றுனரி தீர்த்தப்ரசாத நைவேத்தியம் நிலையானதோ ரௌடதம்
முன்னுளரி லன்பன்செய் பூசா பலத்தினுல் முப்பூசை செய்வெனுமில்
முத்தியுஞ் சகல குண புத்தியும் வித்தையும் முக்காமருள் செய்குவாய்
என்னுளநெ மென்னையென் னுன்னையே நம்பினே னிதுநல்ல போது கண்டா
யிந்த வேளையிலெனக் குந்தனிட கிருபை தந்-தென்னையாட் கொள்ளுமையா
மன்னுரு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(40

பெறவேணு முன்னுடைய கிருபா கடாட்சமும் பிரியாதிருக்க வரமும்
பிணையா யொருத்தரிட வினைதான கற்ற ஒரு பிரயோகமான தொன்று
தாவேணு முன்னுடைய தீர்த்தப்ரசாதமே தந்தென்னை ரட்சிக்கவுஞ்
சகலமானிடவர்க்கு மகலாத பாவங்க ட்டாமல் விட்டோடவுஞ்
திரமாக வுந்தனிட வரமானியந் தந்து திருவுளந் தனை யருளுவாய்
தேசாதி தேசமுன் மது வீசமே திரிலோக நாயகனும் நீ
வரவேணும் நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதியனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேசபரனே (41

நீலத்தினொளிவுடைய மேலுற்ற மாலு நீ நீணில மெலா மானை நீ
நிலைகெட்ட மானிடரை யலையப்படுத்தி வெகு நிர்த்தாளி செய்யுமவ னீ
யாலத்திபூரெல்லை மேலத்தி கீழில்லா மாகப்படைத்தவனும் நீ
யன்புற்று வாழ்கின்ற செம்பொற் கிரிப்பதியி லங்கத்துலங்கு மவனீ
மூலத்தினிற் கண்ட யாலத்து கண்டமும் மும்மூர்த்தியாகு மவனீ
முதலெழுத்தாய வந் தருளுமத்தாவலேன் முறைதனைக் கேட்டருளுவாய்
மாலுற்ற நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(42

அருளுவா யிந்நிலந்தன்னில் வைகுண்டபதியாகப் பிறந்தென்னை நீ
யரிதாசனுமென்று கருதிப் பிடித்தென்னை யாட்கொள்வதென்று வறியேன்
சுரருமீரேழு லோகத்திலுள்ளோர்களுஞ் சூழ மிக வாழ்ந்து வரவே
சுபசோபனங்கள் பல வுபசார மெங்களுஞ் சுகமாயிருக்க வரமும்
பொருளுமே நீ கொடுத்தருளுவா யின்னமும் புத்ர சந்தான பலமும்
போதவே தந்துனது பாதமே பணிகின்ற புத்தி தருவா யிப்பவும்
அருளுடைய நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(43

இப்பவே கும்பாபி சேகமது செய்வமென்-றெண்ணியே கொண்டயன்று
ணிந்திடந் தன்னிலே வந்திடும் பேரெலா மென்மொழிதனைக்கேளுமென்
செப்பினார் திருவேங்கடப்பனார் தன்னுடைய தே பூசை செய்வதற்காய்
சிறுமுளப்பட்டான பரிவட்டமும் புதிய செப்புக் குடந்தானதும்
கப்பூர தூப தீபக்காலுடன் சந்த னக்கட்டை தட்டமொன்று
கப்பிலா மணியொன்று யிப்பவே தருமெனக்-கண்டு தொழுவோர் கடந்தார்
மாப்பிலா னீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனேநிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(44

தந்தார்கள் மற்றுள்ள பந்துவு சனங்களொரு தம்பட்டமொன்று தந்தார்
தாளமொடு மேளமுஞ் சங்கு சேகண்டி வெண் சாமரம் மொன்று தந்தார்
நந்தாவனத்தி லரவிந்தாதி புட்பங்கள் நவமல்லி காதியலரி
நாட்டுவார் நந்தியாவட்டமும் புன்னையும் நற் பாரிசாதங்களும்
செந்தாமரைக் கமல மந்தார புட்பமுஞ் செவ்வந்தி நற்றுளசியும்
தினசரிதை தவராமல் மனவுரிமையாகவே திருமாலை தந்து கொடுவார்
வந்தாதி நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(45

கொடுவர்க ளாகையா லபிசேகக் கட்டளை-குற்றதோ ரெள்ளெண்ணையுங்
குலையே பழுக்கின்ற தலைவாழையின் கனிகள் கூடிய பலாப்பலங்கள்
பிடுவார்கள் சுளையெலா மடைவே யெடுக்கின்ற போன பெரியோர்களும்
பின்னையாவின் னெய்யுந் தேனுந் தென்கனி நல்ல—பெருகு பாலினசீர்களும்
விடுவார் கற்கண்டு சர்க்கரை குடந்தேனல்ல வெல்ல மேலரிசியாவும்
வேகமே சகலாபிசேகமுஞ் செய்யமுத வேளையிற் கொலுவாயினார்
மடுவாரு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(46



கொலுவாயிருந்த போதலர்மேலுமங்கையைக்-கொண்டயன் கண்டவன்போல்
கூறினார் நீலகிரி மேறுவைப் பாரென்று கூவ மானிடவ ரெல்லாம்
சொலுவார்கள் நீலகிரி மேலிருந் தம்மனைச் சூழ்ந்து வரு பந்தமிதிலோ
சுயமான சூரியயோதய மதைப்போலவே சோதி பத்தெட்டாறுமாய்
அலர்மேலு மங்கையுஞ் சலுதாகவே வந் தடுக்கவே நாலிரண்டொன்
றாகவே வந்து வைபோக மாயிப்பதியி லம்மனும் வீற்றிருந்தார்
மலைவாழு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(47

வீற்றிருந் தபிசேமான பின்றழிகை தாம் பூல நைவேத்தியங்கள்
மேலான கற்பூர தீபதூபங்களும் வெகு தயாளத்தினுடனே
போற்றியே சோடசபார சாளக்கிராம பூசையுஞ் செய்த பின்பு
புத்தியாயனைவரும் பத்தியாய் வந்தனை புரிந்தெழுந்தருளி நின்று
சாற்றியே தீர்த்த ப்ரசாத பஞ்சாமிர்தந் தந்தார்கள் வந்தவர்க்கு
மந்தினந் தன்னில் தின சுத்த பஞ்சாங்கமந் தணனுமே தென்றோதுவார்
மாற்றுவர் நீலகிரிவாழு மலர்மேன் மங்கை மார்பனே சயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே (48

திதிவாரவர் கடிதிவார நட்சேத்திரம் யோக காரணங்கண் முதலா
யுச்சமொடு பகை நீச நட்பாட்சி யாதியா யுள்ளதோர் சாரமெல்லாம்
போதவே சோதிடந் தன்னிலுண்டானதின் பொருளெலாங் கண்டு வாஸ்து
புருஷலட்சணமதின் சிரசு பாதங்களும் பூமி லட்சண மறிந்து
மாதமும் வாழ்கின்ற தேதியின் னிலைகண்டு வாசல் பொருத்த மெல்லாம்
வழிகண்டு நூலோர்கள் மொழிகண்டு வாஸ்துவின் வானங்கள் நிச்சயித்து
வாதுளார் நீலகிரி வாழு மலர் மேன்மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(49

நிச்சயம் மாகவுங்க லட்சணந் தன்னையும் நிகரிலா வாஸ்துவின் தன்
நிலையான மேடுமுந் நிலையாதுதென்பதும் நிரையோரை காலொன்று நான்
தச்சருஞ் சிலபேர்க ளுஞ்சிதத் தொழிலாளர் தப்பாதுரைப்பர் சிற்ப
சாஸ்திரந் தானதுஞ் சூத்திரமதாகவே சகலமானவர்களெல்லாம்
மச்சருபற்கு மொரு கெற்ப மண்டபமர்த்த மண்டப மகா மண்டபம்
மட்சமுங் கண்டனைவர் மெச்சவுஞ் சிறிது நால் மட்டமுங் கட்டி முடிவார்
வல்லவா நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(50

முடிவார்கள் சகல சாஸ்திர சம்ப்ரதாயமாம் மூல பிரகாரமாக
மூத்து நவராத்நத்திலுத்தாரமாக நெல் முதலான நவதானியம்
படியாதியாகவே யடியார் மகிழ்ந்து செம் பவளமுந் தங்கம் முத்தும்
பச்சை மஞ்சள் கலையிலட்சதை கண் மூடி செய்து-பழம் நாரிகளே குளமும்
பிடியதாம்பூலமும் படி தண்டலஞ் சொர்ண புட்பங்கள் விஷ்ணுபதியில்
பூசை செய்தவ்விடம் சரணக் கம்பமும் போடவா ரம்பமாகுர்
வடிவான நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனெனுடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேசபரனே(51

ஆரம்பமானதோ சிவொன்பதாம் மிதி லம்மீனராசி நலமென்
றந்தனனுரைக்கவே மண்டிபடுஞ் சத்தியா பாரூட லட்சணங்கள்
நேரம்பிரதாப குருவாரமு முகோதனியு நிச்சயமதான நாளில்
நிலை கண்டு வாஸ்துவின் றலைகண்டு மேடத்தில் நின்று மூர்த்தக்காலையும்
நாரன்பதாகவே பேரின்பமாகவே நன்மை யாசிர் வதித்தார்
நூறு நூறாயிரங் கோடி காலங்கள் நீ டுழி வாழ்கென்று நட்டார்
வாரன்பர் நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனெனுடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(52

நட்டபின் கொண்டயன் கட்ட காலங்கள் போய் நாளுக்கு நாளாகவே
நலமாய் விளங்கவும் பல் தானியங்களும் நன்றாய் விளைந்துபெருகும்
இட்டமாயினவர்க்கு மிஷ்டமான வரங்கள் தேவதா பக்தியதனல்
தேசமெங்கெங்கு மாவோப் பிரசித்தியாய் திவ்யப் பிரகாசமான
பட்டமுங் கட்டியே விட்டவன் போலவே பார்மிதி லாகையாலே
பஞ்ச பாதக மெலா மஞ்சமே தேசங்கள் பரிகார மது வாகுமே
மட்டறு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனெனுடு நடன மிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(53

ஆகுமே சிற்பிசாஸ்திரமுறைமை தவறும லாராய்ந்து பார்த்ததின்மே
லங்குலந் தன்னையே பங்கிறோர் கோவிலுக் கடிவார மது கட்டவே
யிடுவோர் கொத்தருங் காகவே பொருளவர்க் கில்லிடம் மொன்று தந்தா
ரிச்சையா லெவ்விடந் தச்சனோர் மனதினுக் கேந்த நற்கல்லாகு மென்
றோதுவார் கல்லிடந் தேடுவாரிது நல்ல வுத்திரத் தானுகு மென்
றெப்புவாராமென்று செப்புவார் கல்வேலை யுறுதியாய்ப் பண்ணுமென்றார்
வாகான நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனெனுடு நடன மிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(54



பண்ணுமென் றளவிலே கண்ணிலுன் தொழிதாளர் பாங்கானகல்லிதெல்லாம்
புலபேர்கள் முன்பாக விலைகூறி விட்ட பின் பாரையெல்லாம் பிளந்தார்
தின்னமா யொட்டருக் கின்ன விலையா மென்று தீர்த்துவிட்டது காரியம்
தினசரிதை யவரவர்க் கினிதினி யெனக்கண்டு தோரவே சொல்லிவிடுவார்
திண்ணதோர் கல்லெலாம் எண்ணியே கொண்டயன்—கோரான வண்டியேற்றி
நித்தமும் வருதலா லுத்திரங் கூறவே நிசமா யெடுத்து வந்தார்
வண்ணமாம் நீலகிரி வாழு மலர்மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனெனுடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(55

வந்தபின் கொத்தர் தானந்த நற்கல்லெலா மாயவன் கிருபையாலே
வண்ண வண்ணமதாக நுண்மையாய்ப் பண்ணவும்—வரிகொண்டு சேர்க்கை
........................................................................ (செயலும்)
சொந்தமாய்க் காரையும் மறைக்கவே செங்கலும் சுதையுஞ் சுடுதலிலே
சோபசகாங்களு மியாவத்து மியவும் சோருமல் வேலையெல்லாம்
முந்தவே யிப்படி யிந்த நற்றெழிலெலா முக்கியமதாய் நடக்க
முறைமயது தவிருமல் ஊரவின் முறையாறுதி-மூர்த்தியைக் கண்டு தொழுவார்
மந்திவளர் நீலகிரி வாழு மலர்மென் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனெனுடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(56

தொழுவார்களாதி நாராயணன் பாதமே துறைமார்க ளாதிமுதலாய்
தோதண்டியாகவே காதமென் னாதமாம் தூரத்திருந்து வருவார்
விழுவார்கள் பாதத்தில் அழியாத வரங்களும் வேடிக்கையாய்க் கொடுப்பார்
வெகுசித்திரமாகவே எச்சத்திரங்களும் விட்டவர்கள் பட்டு விழுவார்
கொழுவார்கள் தீர்த்த ப்ரசாத நைவேத்தியங் கொடுப்போ மிதென்றுவிடுவார்
கோடி கன்னிகதான மாடியே வருகின்ற குருமார்கள் காண வருவார்
வழுவாத நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனெனுடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(57

காணவருவார் தமக்கூனு யிருமாய் நின்ற கர்த்தனே வருக வென்று
கனமான கொண்டயன் சனிவார தினமதிற் கருணைகான் றனருளால்
தோணுமானதுவெலாம் ரேணுவுந் தவிராத துன்பங்களின் பங்களாய்
தொலையாத் கொலைகளவு பலியாத கருமங்கள் துற்குணப் பேதங்களும்
பேணுமே வேணுகோபாலரைத் தொழுதிடப் பிணி நோயதண்டாடிடப்
பின்னைவுங் கூறுவா ரின்னபடி யென்று தான் பெரியதிருமலைமீதிலே
வாணிவளர் நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனெனுடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(58

திருமலையின் மீதிலேயொரு சாணக்களெவர் தெரியப்படுத்த வசமோ
தேசாதி தேசங்கள் வாசமாயுற்றவர்கள் செப்புவார் சொப்பனங்கள்
அருமையா யவரவர்க் கிருதயந்தன்னி லிவ் வளவென்று காணிக்கையும்
ஐயுறவிலாமலே மெய்யதா யாவர்க்கு மறிவு தந்திடலாகவும்
பெருமையா யவருடைய திருநாள் மதிக்கவும் பிற்பயண மதுவாகவும்
பிரியமா யரிசேவை செய்வோன் பெய்யவும்–பெரியோர் துணைக்கொள்ளவும்
வருமளவு நீலகிரி வாழுமலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(59

கொள்ளுவார் பயணங்கள் வெள்ளனே திருவானி கூடிலுங் காவேரியுங்
கூடுதுறை ஸ்நானங்களாடியே யம்மனைக் கொண்டாடியார் கடந்து
தன்னியே விடுமந்த வெள்ளார் கடந்து மலை தணிவானகனு வாயது
தாம்புரி யாறுவன் காமவினை யேசுமது தாணியாறுங் கடந்து
வெள்ளமணல் மேவிவரு பெண்ணையார் பாலாறுதான்
மித்தியாதி நதிமேவுஞ் சித்தாரு சந்திரகிரி மிதமான நதிகள் முதலாய்
வள்ளமால் நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(60

முதலான நதிக ளென்னசமான மலைகளும் முற்றுங் கடந் தலகையின்
முலையுண்டவாய திருமலை கண்டமாயவன் முன்னிலாழ்வார்கள் தீர்த்தம்
அதிலாடி கோவிந்த ராயர் சன்னிதி தன்னி லதிக பயபக்தியுடனே
யாலத்தி கற்பூர தூபதீபங் கொடுத் தபூர்த நைவேத்தியங்கள்
இதலாமல் நாலூரண்டுதவு காணிக்கை தந் திடுவார் நமஸ்கரிப்பார்
இனிதான நாச்சியார் தனைமுனே தெண்டனிட் டேகியே யதிவேகமாய்
மாதவோர் நீலகிரி வாழு மலர்மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல வனவேங்கடேச பரனே(61

வேகமாய் திருமலைக் கேகியே தீர்த்தங்கள் விளையாடி வந்தவுடனே
வேங்கடா சலபதிக்கங்கனே காணிக்கை வேண்டிக் கொணர்ந்தவெல்லாம்
மாகவே வட்டிமுதல் கட்டியொரு தெண்டமாய் யலர்மேலு மங்கை மார்பன்
ஆதாரமாகவே பாதாரவிந்தமதி லடைவாக வைத்த வுடனே
ஏகமாயாதி கோவிந்த கோவிந்த மென் றெல்லோர் நமஸ்கரிப்பார்
இப்படிக்கொத்த வற்புதந்தா னெமக்கின்ன மெத்தனை தருவரோ
மாகனே நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக்கதிபனொடு நடனமிடுநல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(62



தருவரோ கோடானு கோடி தனமாக வந்து தந்தாலு மற்றதெல்லாந்
தருமங்க ளொரு பங்காகிலுஞ் செய்யாதே தன் மாதி யந்தமெல்லாம்
ஒருவனே யின்னமுஞ் சென்னபட்டணமதி லுற்பவித் திட்ட படியா
லுலகளந்தவ தாரமாகவே யானு மிவ் வுலகத்தினிற் பிறந்தேன்
இருவமென்றொரு நீலகிரி யதின் றென்றிசை யிலங்கு சிறு வானியாற்றுக்
கிருகாத வழிமேவு மொரு கானகத்திலே யிப்பாறை யது தன்னிலே
வருவானே நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக்கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(63

தன்னிலே வந்தனென் றெண்ணில் வரம் கொண்டயன்—றன்னிடத்தா
........................................................................[வேசமாய்)
தரும தானங்களின் பருவ காலங்களும் தானறிந் திடலாகவே
அன்னதானங்களே தென்னவே பரதேசி யரதேசி பசியாரவும்
அரிசேவையும் பெரிய குருசேவை யிருபிறப் பாளருக்கமுது படியும்
சொர்ன்னதானங்கள்மற்றென்ன தானங்களும் சோடசா மகா தானமும்
சுபமுகூர்த்தங்கள் செய்பவர் தமக்கப்பணைகள் சோராமல் நேராகவே
வன்னமாம் நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேசபரனே(64

நேராகவே வந்துதித்த பின் றருமங்கள் நிலைநிற்க வேணு மென்று
நீலகிரி வாசமது சாலவே துலையென்று நின்னூஞ்சல் வனமதனிலே
சீரான திருமலைக் கீறான தலமென்று செல்வம் பொழிந்து வரவே
சென்மாதி யந்தமும் வன்மம் நிறைந்தவர்கள் தினமுந் துதிப்பதாக
பாரானதிற்பிறந் தாராதனங்கள் செய் பவர் தமக் கெந்நாளும்
பரமபத மிதுவதே நிசமென்று எண்ணியே பகர்வரெம தொரு நாள்
வாராத நீலகிரி வாழுமலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே (65

ஒரு நாளு மோயாத திருநாளுமாகவே யுன்னுடைய சன்னதியிலே
யோங்காரமாகவே யசங்காரமான பே யூரதின் பேர் சொல்லவே
கருணாகராதிபன் கிருபா கடாட்சமுங் கண்டு பேயண்டாமலே
கணமானதொரு சடாமுனிவீறு ராட்சத கணங்களது விட்டோடவும்
மருந்தியாக வொரு புத்ர சந்தானத்து வரமுங் கொடுத்த விதமும்
வனபோசனங்களும் தனதானியங்களும் வர்த்திக்கு மந்த வேளை
வருமேரு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(66

அவனிதனில் வாழ்கின்ற மனிதருஞ் சில பேர்க ளனுதினமுமாகவேதா
ஞசாரமாகவே தாசானு தாசரா யடிபணிந்திடுவோர்களும்
பவுரணியும் வருவதைக் கண்டு நிலை தவறாத பண்டிதர்கள்கண்டு தொழவே
பந்த சேருவையாளர் முந்த வேக வளங்கள் பானகமது கொள்ளவும்
நவநீதமுங்கொண்டு புவனிசகவளங்கள்நன் ருய்வளங்கிவருவார்
நடனங்கள் வந்துசெய்திடவும் பராக்கென்று நானிலந்தனில் விளங்கும்
மலைதான நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே (67

விளங்குமோ தாரணிதனிற் புலவர் வாழ்கின்ற வேதபாரக ராகியாய்
விற்பன்னராய் வருஞ் சற்பன்ன பாஷையோர் வேடிக்கை பாடி வரவே
பழங்கவிதை யுந்தன்னுளஞ் செய்பவர்களும் பலவிதமாய்ச் செய்யவும்
பட்டாபிஷேகங்கள் திட்டமாய்ச் செய்யவும், பாக்கியம் பெறுவோர்களும்
களங்கமது வொன்று மில்லாமல் ஜெனங்களிட சங்கடமும் விட்டோடவும்
கார்மேக வண்ணனும் பார்மீதிலிப்படிக் கலிகால வேசமானூர்
வழங்குமே நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக்கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே (68

வேசமா யிப்படிக் காசுகவி பாடுவோர் விசனங்கள் தீர்த்து விடுவார்
விண்ணவர்கள் பூசையும் பண்ணுவார் தினமும்வெகு-வாசமதுவீசுமென்னப்
பேசுவாரந்தணர்கள் பூசுவார் சந்தனம் பிரியமா யரி தாசரும்
பிரபலமதாய் நல்ல குருபல மிருக்கவே பின்னையொரு தாழ்வுமுண்டோ
ஓசையாகிய சங்கு சக்ர மிருக்கின்ற வுச்சிதமதான மணி கொண்
டோராயிரத்துளப மாரா தருச்சனைகள் உயர்குலத்தோர்கள் செய்யும்
மாசிலா நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடுநடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே (69

எனவே யனேக நாள் நவராத்ந கல்யாண மிடைவிடாதது போலவே
எம்பிரான் றன்னையே நம்பினோர் கட்கெலாம் மேதுவினை யணுகாமலே
கனமாயனந்தனும் வாசுகி தட்சகன் கார்கோடனும் பதுமனும்
சாதுள மகா பதும சங்க பாலன் குளிகனுங் கறையுள்ள சற்பமெல்லாம்
புகமே திரிந்திடும் மனிதரைத் தீண்டு மப் போது திருவேங்கிடப்பா
போற்றியென்றே துளசி தீர்த்தமதை யுட்கொண்டு போதவே யிருதயத்தில்
வசமேவு நீலகிரிவாழு மலர்மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே (70

இருதயந் தன்னிலே கருதினோர் கட்கெலாம் மெக்கால கோடி விஷமும்
வலிபெருந் தேன்வரி புலிவர் சரக்காடி ஒன்றாரு விரைக்களெல்லாம்



பருதியைக் கண்டிடும் பனியதின் போலவே பாந்திடும் விஷமதெல்லாம்
பச்சனாபியு முந்த னற்பிதஞ் செய்த பின் பட்சிக்கவே யமுர்தமாம்
துற்தோச கருமங்கள் பரிகார மாகுமே தொல்லுலகி லெல்லவர்க்கும்
துன்பங்களணுகாம லின்பங்கள் தந்திக சுதந்திர மர்தாயிருப்பார்
வாதமுறைநீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே (71

பார்மீதி லுன்மகிமை யார் காண வறியார்கள் பங்கேருககண்களும்
பஞ்சாயுதங்களும் தன் சாயலாகவும் பைந்துளப மாலை யழகும்
கார்மேக வண்ணமும் கூர்மாவதாரமுங் கற்றதொரு நான்கு புயமும்
கனமும் பூமியை யழக்கின்ற பாதங்கள் கனகிரீடத்தின் ஒழிவும்
மேர்போல் விளங்கு முன் சோமான திரேகமும் விசுவரூபத்தின் வடிவும்
விண்ணு மண்ணுக்குமாய் எண்ணு முன்னிசரு மெனக்கருள் புரிவதாய்
மாவாரு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே (72

தாயுமா யிப்புவி யுபாயமா யின்றிடும் சருவே வுயர்ந்த திருவே
தங்கமே யலர் மேலு மங்கையே யல்லாத தாயுந் வேறொருவரில்லை
நீயுமிப்புவிதனில் யாவரைக் கற்[illegible] நிசமான தந்தையும் நீ
நிலையான வசுதுவாவு யலைகடற் [illegible] நிமலனேவுலகமுண்ட
வாமனே யெந்தனிட மாயமுள்ளது வரை வச்சிர சரீரமாக
வரமேகொடுத்து யெம்புரமே தடுத்து திரு வடியே கொடுத்து ரட்சி
மாயனே நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேசபரனே (73

ரட்சிக்கவேணுமுன் பத்தற்கு மேதொழு [illegible]காமலே
இரங்க வைபோகமும் பொங்கவே யனுதினம் மிருப்பகல் மானிடமுயுன்
குட்சிதனில் வைத்துனது சித்தமிரங்குவாய் கோபாலகிஷ்ண தேவா
கோவிந்த கோவிந்த மென்றடி யனந்துனைக் கும்பிடுவர் சிலபேர்களும்
வச்சத்தலத்திலே நிச்சயமதானதிரு வருதாரமுங் கண்டுமே
வருவார்களனுதினம் தொழுவார்கள் ரட்சியும் [illegible] பொருந்துவார்
மட்சமுள நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக்கதிபனொடு நடனமிடுநல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே (74

பொருதுவாரளவிலாத் தீபதூபங்களும் [illegible]விக்கு மவர்கள்
பூதலந்தன்னிலே வேதனைகள் தீரவே புனிதமாய்ச் செய்து விடவும்
சிறிது பேர் கொத்தர்கள் பொருதுவார் வேலையுஞ்-[illegible]காறைசெய்வார்
சிகர கோபுரமது பகரமாய்க் கட்டுதற் [illegible]லையே பணமதென்று

கருதவே வேங்கடேஸபாருமாவேசமாய்க் காயிலின் பட்டணத்தில்
கனமான கொப்பரிகைத் தனமே யிருக்க நீ கருதுதற் கென்ன குறையே
வருதிதோ நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(75

குறைவிலாத் திரவிய மிருக்கின்றதா வலகை கூழி வேதாளங்களும்
கோடானு கோடி விளையாடலும் பாடலுங் கூட்டமுங் காட்டி நிற்கும்
துறையிலே யானிருந்தொரு பேய்வருமலதி தூரமா யேகுதற்காய்
துஷ்ட கன்மாதக யஷ்டதிக்கது கட்டி தூப திபங் கொடுத்து
முறையிடும் பன்றியின் கன்றதைப் பலி தந்து மூவைந்து பேராகவே
முதலாதி யந்தமும் வெதருதெ கொடு வந்து மூலப்ரகார சிகரம்
மறையாதி நீலகிரிவாழு மலர்மேன் மங்கை மார்பனே சயரூபனே
வடமலைக் கதிபனொடுநடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே (76

சிகர கோபுரமது பகரமாய்க் கட்டுவீர் திரமான வெளி மண்டபம்
சேரவே கெருட மண்டப மடைப்பள்ளியுஞ் செல்வத் துவார பாலர்
நிகரிலாப் பெரிய திருமதிலொடு மதிழ்க்குறடு நிற்பர் பன்னிருவராழ்வார்
நேரான கம்பமும் சீராகவே கண்டு நிலையாய் நிறுத்த வழியும்
நகரமாய் வேதியர்க் ககரமே கட்டவும் நாற்றிசை விளங்குதம்காய்
நலமான தெப்பவாவியுமு முருதோதும் நடனமிடசங்கீதமும்
மகரமுள நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக்கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(77

சங்கீத சாயித்தியங்களும் முப்பூசை தவறும லெக்காலமுஞ்
சனிவார மாயிரங் கனியாபிடேகமுஞ் சம்பூர்ண மது வாகவும்
சிங்காரமாகவே தங்கக் கிரீடமுஞ் செய சங்கு சக்ராயுதஞ்
செப்புக்குடங்கனக பஞ்ச பாத்திர முதற் சிறிது நகை வேணதெல்லாம்
பங்காதசோர் திரவியங் கூறு செய்திடும் பாதி தனி வந்த கையும்
பரவசமதா நன்ன சத்திர மதொன்று கட்டவும் பரிபாலனங்கள் செய்வாய்
மங்காத நீலகிரி வாழு மலர் மேன்மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(78

செய்யவே பாதிதானைய மிட்டுண்ணவுஞ் சிறுவரும் பெரியோர்களும்
சிந்தை தனிலே மன மகிழ்ந்தன்ன வஸ்திரஞ் சிறுதாவினங்க ளொருதும்
பையவே விவசாயஞ் செய்யவுஞ் சகல சம் பத்துமுண்டாரு மென்றே
பற் பல விதங்களா லலர்மேலு மங்கையோர் பங்கனு மதேக விதமாய்
மெய்யென்றுரைத்தனர் கொண்டயன் சொல்லரிது மேதினியினீதிங்கலையே
மெள்ளவே குருசமய முள்ளவிற்தாதியாய் மிகலாத சத்திய மெல்லாம்
மையேறு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(79



மேலான குருவாதிமூல ப்ரதானங்கள் மிக்கவர்கள் சொற்கேள்வியால்
விவரப்படுத்தி சவரட்சணைமதாகவே வேதசாஸ்திர மாதியாய்
நாலாயிரத்தின் பிரபந்தங்கள் பதினெண் புராணங்கள் வாசித்திடும்
நலமாயிலங்கு திருமலை வார்கள் பட்டரும் நல்லாரையங்காரையும்
கோலாகலமதாகவே கொண்டயன் குருமார்கள் சமூகத்திலே
கொண்டியுஞ் சமயமு முத்தண்டமாய்த் தந்துசெங் கோன்முத்திரைகை
............................................................( விருதும்)
மாலான நீலகிரி வாழுமலர் மேன்மங்கை மார்பனே சயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(80

விருதான சங்குசக்கிர டாலுமொழிவான [illegible]நுமந்த டாலும்
மேலான செங்கெருட டாலுமண்டயானமும் வீரசடையாவட்டமும்
பெரிதான தம்பட்ட மெருதாயிரண்டுமுன் பின்னையொரு தீவட்டியும்
போனான மூவர் குருமார்களின் சமயமும் பிரியாதிருக்க நெறியாய்
அரிதான பாவாடமொரு நாழிகைக்குளே அழியாதெழுப்பவழியும்
அத்தையுந் திருமந்திரத்தை யுபதேசமா யடையாயுனாத்து விடவே
வரதனே நீலகிரி வாழுமலர் மேன் மங்கை மார்பனே சயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடுநல்லூஞ்சல் வனவேங்கடேசபரனே(81

விடவே யகோர் கும்பிடவே யென்னேரமும் வேடிக்கையதுவாகவும்
வேதியர்கள் முதலான சாதியார் தன்னிடம் வெங்கடேசுரர் சொப்பனந்
தடையேதிலாமலென்னிட சன்னதிச் செலவு தப்பாமலப் போர்களும்
தண்டலும் வரியேடு கொண்டயன் சொற்படித் தவறும லவனிதனிலே
கொடவேணு மவரவர்கள் இடமேயிருந்துமுன் கூறிடுஞ் சொப்பனத்தில்
குறையாமலொருகாசு மறவாதே சன்னதிக் குள்ளவரியே தந்திடீர்
வடமேரு நீலகிரி வாழுமலர் மேன்மங்கை மார்பனே சயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(82

தந்திடீர் என்ற பின்னிந்த நற்கொண்டயன் றன்னுடைய சொப்பன
............................................................'த்திற்)
றரணிதனிலுன்ன போறிவுடனே கொடு வந்த தவுதானியங்கள் முதலாய்
உந்தனிட தண்டலுக்கிந்த நற்றனமெலா முன்னிடந்தனிலிருத்தி
யுறுதியாய்க் கொத்தரிட சரிதையின் முறையாக வஸ்திரத் தனதெல்லாம்
சிந்தையினினைந்தபடி யுந்த நயகாரையுஞ் சிகரமணி மண்டபங்கள்
சீக்கிரமதாகவே தாக்கீது செய்தபின் செலவிடும் பணமதெல்லாம்
வந்திடும் நீலகிரிவாழு மலர் மேன்மங்கை மார்பனே சயரூபனே
வடமலைக் கதிபனொடு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(83

ப்ணமே விடங்கு மெங்கனுமாதியந்தமும் பகவான் றிருக்கருணையாற்
பண்டை நாளாதியாய்க் கொண்டயன் மீதினிற் பதியாயிருந்து தானுந்
துணையாயிலங்கி யந்தணராதியந்தமுந் துதிசெய்வதற்காகவே
நூலங்கள் சாவடிக் கோலங்கள் செய்யவுந் துளசிமண்டபமாதியாய்
சணமே முடித்த பின்னணியாரும் மதிலுடன் சர்வமும் நிறைவேறவுஞ்
சம்பிரம திண்டைகள் செய்துபின் நம்பிமார் தன்னிலே சற்குணன் பூசி
......................................................................(க்கவே)
மணமேவு நீலகிரிவாழுமலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனெனும் நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(84
பூசிக்கு மத்தலந் தனி லன்னதானம் பரி பூரணமதாய்ச் செய்குவோர்
பொன்மலை தனிற் சென்றுசொர்னதானஞ்செய்த-புண்ணியமிரட்டியுண்டாம்
காசிக்குள் வாழ்கின்ற விண்டு மாதவரையுங் கண்டு தொழுகின்றபலனும்
கிரியுரியு மானுடைய விருமத்தி யேகிடும் கங்கைமா நதி பலனெலாம்
பேசிக்கு மாலத்தியு ரெல்லை குடிகொண்ட பெருமான் றிருத்துளசிநீர்
பிரியமா யாவருங் கருதி யுட்கொள்ளவே பிரமத்தி யேகு மன்றே
வாசிக்கு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக்கதிபனெனும் நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே 85
விருமத்தி யேகிடும் மாதலா லின்னமும் வெகு தோஷ மேருமென்றும்
வேத நூல் முறைமையின் நீதியா லனைவோர்கள்-விப்பிரருமுறைசெய்குவார்
திருமத்தை யின்னதென் றுரைசெய்யொணு தெனத்-தலை மூதற் காலந்தமும்
தனிலுள்ள விலையெலாமுன்னிலேசெங்கண்மால்-தன் றீர்த்தமுட்கொள்ளவே
அருமத்தியாதி தந்தமதான கோய்களுடன் னருச்சனை யின வுடதத்தா
லரியரி முகுந்த கோவிந்த வைகுந்த வுன் னருமை யாரறிவர் சொல்லாம்
வருமத்த நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனெனும் நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(86

சொல்லாயுதத்தினு லல்லாத வஞ்சனைகள்—துரோகங்கள் செய்தவரையான்
சொன்ன சொல் லம்பாக வுந்தை தவறுவதைச் சோதனைப்படி காணவே
கொல்லாய லெங்காளு மில்விடந்தன்னிலே கொடிய வினைதனிலழுந்திக்
கோவென்று முறையிட்ட பாவங்கமர்த்திடாய் கோவர்க்க வுத்தாரகா
சல்லாப சற்குணர்க் கொல்லாத வினைவரிற் றட்சணந் தனிலாற்றிடுந்
தந்தை தாயாகு மானந்த வைபோகனே சத்ரு சங்கார குருவே
வல்லான நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனெனும் நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(87
சங்கார மது செய்ய ரெங்கெங்கு முளதுஷ்ட சந்துவானதுக ளெல்லாந்
தந்திரத்தாலு முன் மந்திரத்தாலே தகிக்கப் பொருத்தி விடுவாய்
சிங்காரமாகவே யெங்கும் நிறைந்து நர சிங்க ரூபா வஸ்துவே
நிதிது காலங்களுக் குறுதியாய் ரட்சிப்பாய் தேவேந்த்ர னாதியையானேன்



உபகாரணத்தினு லெங்காகி லில்லாத் தினீதி யுந்தா னெனக்கருளுவா
யுன்னுமமே யெனக் கெந்நாளு மறவாத வுபதேச மந்திரந்தான்
மங்காத நீலகிரி வாழு மலர்மேன் மங்கை மார்பனேசுயரூபனே
வடமலைக் கதிபனெனும் நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேசபரனே(88
மந்திரந் தன்னையா னந்தி பகலாகவும் மறைவாதிருக்க வருளும்
மாதவத்தோரும்பர் வேத வித்தோ வென்பர் மறையோர்க ளறியோர்களும்
சிந்தை மனமகிழாம லுந்தியி னுதித்தவன் றிருமாலு மொரு மூவருஞ்
செகதலந் தன்னிலே சகல மானிட ஜீவ ஜெந்துகடமைத்திலகவே
சொர்தமாங் கொண்டயன் சன்னதங் கொண்டு நற் சுஸ்திரமதா யவனியிற்
சோபனங் கூறவே ரூப ரூபங்களாய்ச் சுப மங்களம் பாடினார்
வந்தனைசெய்நீலகிரி வாழுமலர் மேன் மங்கை மார்பனேசுயரூபனே
வடமலைக் கதிபனெனும் நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேசபரனே(89
பாடினார் நீராடி நூற்றெட்டுத் திருப்பதி-பணி விடைகள் செய்த பலனும்
பயபக்தியாக நற் சுய புத்தி தன்னுடன் பார்மீதி லித்தலத்தில்
தேடியே தீர்த்தங்க ளாடி வைகுண்டபதி தெரிசனத்தைக்கண்டபின்
றிருவடிகளைக் கண்டு மறுபடியினிற் றுளசி தீர்த்தமுட்கொள்வார்சிலர்
கோடியே பலனென்று நாடியே துாவோர்கள் குற்ற மற்றின்னபடியென்
றிருவ சம்மொழியை நூறு மொழியு மென்று குவலயந்தனிலோதினார்
வாடொணு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனேநிசரூபனே
வடமலைக் கதிபனெனும் நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேசபரனே(90
ஓதினு ரிப்புதுமை மாதவத்தோர் சொன்ன வுத்தரந் தானிதென்று
வுறுதியா யென்னுளவா ரரிபாத பதுமத்தி லூழி காலங்கள் வாழ்வார்
தீதிலாத் தலமீது புராதனமதாய் நின்ற திருவேங்கடா சலத்தார்
திருவுளப் படியினு லருளு மிக்கவிதையைத் தெரிசனப் படியாகவே
நீதி தவறுமலந்தாதி வழியாகவே நெறி முறைமை தவறாலே
நிலை பதியில் வேங்கடா சலபதியதாய் வந்து நின்று குடி கொண்ட மந்த்ர
வாதியே நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனெனும் நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேசபரனே(91
குடி கொண்ட பாறை மீதிடமென்று தானின்று-குவலயந்தன்னில்வாழுங்
கொண்டயன் சன்னதங் கண்டிதமதாகவே குறியேறு தவறாமலே
கொடிகொண்டு தானு மடி முடி கொண்டு சொல்லிய-விநோதவேதங்களாலும்
நன்மையா யாவருந் தன்மையாய் வாழ்க விண்-ணு... ன் வனமதனிலே
செடி கண்டு நிலைகொண்ட படி யண்டாது கண்டு-... படிபாதையால்
செய செயா வென்று தானியல்புடன் பணிகின்ற ...நுக்காதி முதலே
வடிகொண்ட நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனேநிசரூபனே
வடமலைக் கதிபனெனும் நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேசபரனே(92

முதலான தேவருக் கதிபதியுமாய் நின்ற மூர்த்தியே கீர்த்திபரனே
மூச்சகந் தன்னிலே நிச்சயமதாய் நின்ற மூர்த்திக்கு வித்தானவர்
சதகோடி சூரியப்ரகாசமா யெங்குமாய்ச் சருவமுந் தானுகியே
சகல பாவங்கள் விட்ட கல வெக்காலமுஞ் சந்தோஷ முண்டாகவும்
மிதமான வைகுந்த பதவி பின்னியவும் மெத்த சம்பத்தாகவும்
மேதினியினிற் பரஞ் சோதியாய் வாழ்கின்ற வேங்கடாசலமதாகும்
மதுவாழு நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனெனு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(93

ஆகவே கலியுகம் நாலாயிரத் தொடு தொளாயிரத் திரொன்பதில்
லரனுடைய வருஷமா சாடமாதத்து முத லமவாசை புனர் பூசமும்
யோகமே யரிஷணம தாகியம் புலிவார முற்றாங் கேற்றினன் யான்
உலகளந்தவனுடைய தலமதின் றன்னிலே யுத்தமமதான நாளின்
மேகமே நின்றிருந் தாரையாய்ப் பொழியவே வெகுதானியம் விளையவே
மேலான கண்ண நகராலயம் மேவு ஸ்ரீ வேணு கோபாலனருளால்
வாசமா நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனெனு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(94

அருளான வாரி திரு வாலத்தி நகர் மேவு மலர் மேலு மங்கை மார்ப
னதி செயமதாகவே துதி செய்வதற்கு மா யவனிதனிலே விளங்கப்
பொருளான தலப்புராணத்து வழி சொல்லவே புத்தி உத்திர மோரையாய்ப்
புவிதனில் மதிக்க விக்கவிதை தானெழுதிடுங் புனிதனு மொன்றுமினவில்
குருவாரு மாதி திருமலைவார்கள் சேனுங் குறைவிலாக் கம்மவார் தங்
குலமான ரற்றிறுனுறுதிலகனுமேற் பூரு கோத்திரமதானனனை ஜெனனம்
மருளான நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனெனு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(95

சுசனமானுதாதி பீடம் பள்ளி நகரமே சொந்தமா தினமாரும்
சொன்ன மொழி தவருத கனனன கோவிந்தயன சுதனுகு நாரணப்பன்
நிசமதாகிய கண்ண நகரமது குடி கொண்ட நிலையான குலசேகரன்
ரீதியா யித்தல புராணத்தை யெழுதினே னீலகிரி வாசரருளா
லிசையுமா யொரு நூறு வசனமாயோதுவோர்-எழுதுவோர்கவிதைகேட்போர்
இதமான வைகுண்ட பதிவியே பெறுவார்க ளென்று துறவோர் கூறுவார்
வசனமே நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிப[illegible] நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(96

கூறுவா ரரியா[illegible] மூவர் தேவருங் கூடி விளையாடு தலமாங்
கோடானு கோ[illegible] பேர் நாடியே தேடி வரு கோதண்டராமர் தலமாஞ்
சேறுவா ரதேசி பரதேசி முதலான செனமங்கிருக்கும் வனமாம்
சிரான முப்பூசை யாராதனஞ் செய்யுஞ் சித்தர் பூசித்த தலமாம்



ஆறுவாரணமது நேருவாரணவருக் கமுதம்பகர்ந்த தலமாம்
அவனிதனிலேயென்ன வுன்னிவருகிற மாயவ மவுதாரமான தலமாம்
வாறுவார் நீலகிரி வாழுமலர் மேன்மங்கை மாயனே சுய ரூபனே
வடமலைக்கதிபனெனு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(97

தலமாயிலங்குதிரு மலைமீதில் வாழ்கின்ற தாமோதரன்ற னுடைய
தம்பியிவர்தானே முன்னும்பர் பூசித்திடுஞ் சங்குசக்ர யுதந்தா
னலர்மேலு மங்கைபங்கினில்மேவி வாழுமென் னப்பனே யிப்புவிக்குள்
ளாச்சந்தரகாலமும் பூச்சக்ரந்தன்னிலே யாரேனுமிக் கவிதையை
பலபேர்கள் வாசிப்பர் பூசிப்பராகவும் பாதியா யித்தலத்தில்
பிரமபதமேதருக வாமுதவு வார்திருப் பதிவேங்கடேசர் வாழி
வலமான நீலகிரி வாழுமலர் மேன்மங்கை மார்பனே சுயரூபனே
வடமலைக் கதிபனெனு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(98

வாழிசெந்திருவு மீரேழுலோகங் களும் வாழிமுனியோர்கள் வாழி
வாழி வளர் முப்பத்தி முக்கோடி தேவரும் வாழி மறையோர்கள் வாழி
வாழி மாதா பிதா குரு தெய்வ மாதியாய் மன்னர் விற்பன்னர் வாழி
வாழி வளர் காவேரி கங்கையுஞ் செங்கண்மால் வாழி யென்னளும் வாழி
வாழி மகமேருவும் பூமியாகாசமும் வளர் பயிர்கள் மிக வாழ்கவும்
வாழியே திங்கண் மும்மாரி பெய்யவும் [illegible]ரமருளவே மங்களம்
வாழியே நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனே நிசரூபனே
வடமலைக் கதிபனெனு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேசபரனே(99

மங்களந் திருவேங்கடேசனே சேஷகிரி வாசனே சுபமங்களம்
மங்களம் ஸ்ரீரங்க ரங்க மந்திர மேவு மாயனே சுபமங்களம்
மங்களங் காறை வன ரங்கநை யனுதினமு மறவாதிரு மங்களம்
மங்களஞ் செங்கருட வாகனு ரூடராய் [illegible]
மங்கள முழங்கு பீடம்பள்ளி வாழ் ஸ்ரீநி வாசனே [illegible]ங்களம்
மங்களந் தானூற் றெட்டுத் திருப்பதி மங்களமே சம்[illegible]
மங்களமே நீலகிரி வாழு மலர் மேன் மங்கை மார்பனேசுயரூப[illegible]
வடமலைக் கதிபனெனு நடனமிடு நல்லூஞ்சல் வனவேங்கடேச பரனே(10[illegible]